بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 25.07.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 25, July 2014 (Tamil)

## லைலதுல் கத்ரும் மற்றும் ரமலானின் இறுதி ஜுமுஆவும்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

ரமலானின் இறுதி பத்து நாட்கள் மிகவும் வேகமாக கடந்து கொண்டிருக்கின்றன. இந்த பத்தில் முஸ்லிம்கள் இரு விஷயங்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துகின்றனர். அல்லது முக்கியத்துவம் வழங்குகின்றனர். அவற்றில் ஒன்று லைலதுல் கத்ர் ஆகும். இரண்டாவது ஜும்அதுல் விதாஃ அதாவது வழியனுப்பப்படும் ஜுமுஅ ஆகும். இதில் ஒன்று அதாவது லைலதுல் கத்ர் ஒரு உண்மையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமும் நிரூபணமாகின்றது. ஹதீஸ்களிலும் பல்வேறு அறிவிப்புகளிலும் இது பற்றி கூறப்பட்டுள்ளது. இதே போல் திருக்குர்ஆனிலும் இது பற்றி உள்ளது. ஆனால் ஜுமுஅதுல் விதாஃ அதாவது வழியனுப்பப்படும் ஜுமுஆ தொடர்பாக முஸ்லிம்களே அல்லது ஆலிம்கள் தங்களுடைய சுய விளக்கங்களினால் தவறான ஒரு நடைமுறையை ஏற்படுத்தியுள்ளார்கள். இன்று நான் இந்த இரு விஷயங்களின் பக்கமே கவனமூட்டுவேன். அல்லது அவற்றின் முக்கியத்துவம் மற்றும் உண்மைத்துவம் தொடர்பாக சுருக்கமாக கூறுவேன். இன்றும் நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் குத்பாக்களிலிருந்து பலன் பெற்றுள்ளேன்.

லைலதுல் கத்ர் தொடர்பாக பல்வேறு அறிவிப்பாளர்கள் பல்வேறு நாட்களை கூறியுள்ளார்கள். பொதுவாக லைலதுல் கத்ர் ஐ ரமலானினுடைய இறுதி பத்து நாட்களில் தேடுங்கள் என்றே அறிவிப்பில் இருக்கின்றது. எவ்வாறிருப்பினும் லைலதுல் கத்ர் எப்படிப்பட்ட ஒரு இரவு என்றால் அதற்கு ஒரு உண்மைத்துவம் இருக்கின்றது. மேலும் ஒரு உண்மையான நம்பிக்கையாளருக்கு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகள் காட்டப்படுகின்ற மேலும் பொதுவாக துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இந்த இரவின் குறிப்பிட்ட தேதி பற்றிய அறிவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது என்பதும் உண்மையாகும். ஆனால் இரு முஸ்லிம்களுடைய தவறின் காரணமாக இந்த குறிப்பிட்ட தேதி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறந்து விட்டது என்பது அறிவிப்புகளிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. இந்த நேரம் பற்றி அறிவு இருப்பது ஒரு சாதாரண விஷயமல்ல. மேலும் தனக்கு அல்லாஹ் வழங்கிய இந்த அறிவை நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்திற்கும் வழங்க வேண்டும் என்ற எண்ணம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உள்ளத்தில் இயல்பாகவே உருவானது. ஆனால் அன்னார் வெளியே வந்த போது இரு முஸ்லிம்கள் சண்டையிடுவதை கண்டார்கள். மேலும் அவர்களுடைய சண்டையை மற்றும் கருத்து வேறுபாட்டை நீக்கும் முயற்சியில் அந்த குறிப்பிட்ட தேதியிலிருந்து அன்னாரின் கவனம் சிதறி விட்டது.

எவ்வாறிருப்பினும் அன்னாரின் கவனம் மீண்டும் இதன் பக்கம் வந்த போது லைலதுல் கத்ர் பற்றிய குறிப்பான தேதி அதற்குள் மறந்து விட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். அதாவது ஹதீஸ்களின் வார்த்தைகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அன்னார் மறக்கவில்லை. மாறாக, இறை நாட்டத்தின்படி அந்த நேரம் பற்றி நினைவு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆக, இந்த சண்டையின் காரணமாக அல்லது கருத்து வேறுபாட்டின் காரணமாக இந்த நேரம் பற்றிய அறிவு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனவே இனி குறிப்பிட்ட தேதி இல்லை. ஆனால் இதை ரமலானின் இறுதி பத்தில் ஒற்றைப்படை இரவுகளில் தேடுங்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதிலிருந்து ஒரு மிக முக்கியமான கருத்தை ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது (ரலி) அவர்கள்

கூறியுள்ளார்கள். அதாவது எந்த நேரத்தைப் பற்றி லைலதுல் கத்ர் என்று கூறப்பட்டுள்ளதோ அதே சமுதாய ஒற்றுமையோடு தொடர்புடையதாகும். ஆக, இது மிக முக்கியமான கருத்தாகும். எந்த சமுதாயத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் அழிந்து விடுமோ அதிலிருந்து லைலதுல் கத்ரும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பல முஸ்லிம் நாடுகளினுடைய துரதிஷ்டத்தினால் அவர்களில் ஒற்றுமை இல்லாமல் போய் விட்டது என்று மிகவும் வருத்தத்துடன் கூற வேண்டியதிருக்கின்றது. பொது மக்கள் பொது மக்களோடு சண்டையிடுகின்றனர். பொது மக்கள் அரசாங்கத்தோடு சண்டையிடுகின்றனர். மேலும் அரசாங்கள் பொது மக்கள் மீது அநீதி இழைக்கின்றது. ஆக, ஒற்றை இல்லாமல் போனதோடு மட்டுமின்றி மாறாக, அநீதியும் இழைக்கப்படுகின்றது. பிறகு அந்த அநீதியில் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இந்த ஒற்றுமையின் குறைபாட்டின் காரணமாகவே முஸ்லிம்களுக்கு எதிராக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற தைரியம் மற்றவர்களுக்கு பிறக்கின்றது. இந்த காரணத்தினால் தான் இஸ்ரேலும் அநீதியான முறையில் இப்போது அப்பாவி பாலஸ்தீனியர்களை கொன்று குவித்துக் கொண்டே செல்கிறது. முஸ்லிம்களில் ஒற்றுமையும், நல்லிணக்கமும் இருந்து மேலும் இறைவன் கூறிய வழியில் நடந்திருந்தால் முஸ்லிம் நாடுகளினுடைய சக்தி எவ்வளவு பெரியதென்றால் இது போன்ற அநீதி நடந்திருக்காது. போர்களுக்கும் கூட சில நிபந்தனைகளும் நெறிமுறைகளும் இருக்கின்றன. இஸ்ரேலோடு ஒப்பிடும் போது பாலஸ்தீனியர்களிடம் எவ்வித சக்தியும் இல்லை. ஹமாஸினரும் அநீதி இழைக்கிறார்கள் என்று கூறப்பட்டால் முஸ்லிம் நாடுகள் அவர்களை தடுத்திருக்க வேண்டும். ஆனால் அந்த அவ்விருவர்களின் அநீதிகளைப் பற்றி கூறவேண்டுமென்றால் ஒருவர் தன்னுடைய கம்பால் அநீதி இழைக்கின்றார். மேலும் மற்றொருவர் ஒரு படை பீரங்கிகளால் அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றது என்பதாகும். கடந்த நாட்களில் துருக்கியில் துக்கம் அனுசரிக்கப்பட்டது. துக்கம் அனுசரிப்பதனால் அவர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டி விட்டார்கள் என்று முஸ்லிம் நாடுகள் நினைக்கின்றன. இதே போல் மேற்கத்திய சக்திகளும் தங்களுடைய பங்களிப்பை சரிவர செய்யவில்லை. இரு தரப்பினர்களையும் கண்டித்து நிருத்தியிருக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் நம்மால் துஆவே செய்ய முடியும். அல்லாஹ் அநீதிக்குள்ளானவர்களையும் அப்பாவிகளையும் இந்த அநீதிகளிலிருந்து பாதுகாப்பானாக. மேலும் அமைதியை நிலைநாட்டுவானாக. இது போன்று முஸ்லிம் நாடுகளிலும் ஒருவர் மற்றொருவர் மீது அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் குழப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் அவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. கலிமா கூறும் ஒருவர் இன்னொரு கலிமா கூறுபவரின் இரத்தத்தால் தமது கைகளை நனைத்துக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்தும் இவர்கள் பாதகாப்பாக இருப்பார்களாக. ஒருவருக்கொருவர் மத்தியில் ஒற்றுமையும் நல்லிணக்கமும் உண்டாகட்டுமாக. இதுவன்றி இவர்களின் இறை வணக்கங்களின் உரிமை செலுத்த இயலாது. மேலும் எங்களுக்கு லைலதுல் கத்ர் கிடைக்காதா என்ற ஏக்கமும் பூர்த்தி அடையாது. ஏனென்றால், எப்போது சமுதாயத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் அழிந்து விடுமோ பிறகு லைலதுல் கத்ரும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பிறகு இரவுகளும் இருள்களுமே அவர்களுக்குரியதாகி விடுகிறது. முன்னேற்றமும் தடை பெறுகிறது. லைலதுல் கத்ர் என்பதன் பொருள் மனிதனின் நற்பாக்கியத்தை கணிக்கக்கூடிய இரவு என்பதாகும். அதில் வருகின்ற வருடம் அவனோடு எப்படிப்பட்ட விவகாரங்கள் நடக்கும். அவன் எதுவரை முன்னேறுவான். என்னென்ற பலன்கள் கிடைக்கும். மேலும் என்னென்ன இழப்புகளை சந்திக்க நேரிடும் என்ற தீர்ப்பு வழங்கப்படுகின்றது. மனித முன்னேற்றத்தின் அனைத்து தீர்ப்புகளும் இரவு அதாவது இருளில் தான் நடக்கின்றன. இந்த முன்னேற்றத்தின் உதாரணத்தை உடல் ரீதியான முன்னேற்றத்தோடு இணைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு ஓரிடத்தில் கூறியுள்ளார்கள். அதாவது மனிதனின் உடல் ரீதியான முன்னேற்றமும் தொடர்ந்து இருளில் தான் நடக்கின்றது என்பது திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது. தாயின் வயிற்றில் குழந்தையின் வளர்ச்சி பற்றி. தாயின் வயிற்றில் அனைத்து இருள்களின் ஒருங்கினைப்பு இருக்கின்றது. மேலும் அங்கு தான் மனிதனின் உடல் ரீதியான முன்னேற்றத்திற்கான ஏற்பாடும் நடக்கின்றது. இந்த நாட்களில் வளர்ச்சி சரிவர இல்லை என்றால் குழந்தை பலவீனமாகிவிடுகின்றது.

ஆக, இருளில் இருக்கின்ற இந்த நாட்களில் குழந்தையின் வளர்ச்சி பற்றி குறிப்பான கவனத்தை ஷரீஅத் கற்றுத் தந்துள்ளது. மேலும் இந்த கவனத்தின் தொடர் எதுவரை இருளின் தொடர் இருக்கின்றதோ அதுவரை நீண்டு கொண்டே செல்கின்றது. இதே போல் குழந்தை தாயிடமிருந்து பால் அருந்துகின்ற நாட்கள் வரை இதன் தொடர் நீண்டும் பரவியும் உள்ளது. ஏனென்றால், இந்த நாட்களில் குழந்தை தன் வாழ்விற்கு உலகத்தின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. மாறாக தாயின் பக்கமே கவனம் செலுத்துகின்றது. இந்த நாட்களில் குழந்தையின் வளர்ச்சி மற்றும் அதனுடைய ஆரோக்கியத்தில் தீய தாக்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக தாய்மார்கள் நோன்பு வைப்பதும் தடுக்கப்பட்டுள்ளது. ஆக, எவ்வாறு உடல் ரீதியான முன்னேற்றங்கள் இரவில் நடக்கின்றதோ அதே போல் ஆன்மீக முன்னேற்றமும் இரவில் தான் நடக்கின்றது. ஒரு சமுதாயத்தின் ஆரம்ப தியாகங்களே அந்த சமுதாயத்தினுடைய ஆன்மீக முன்னேற்றமாக இருக்கின்றது. அந்த முன்னேற்றங்களின் வயது அதன் லைலதுல் கத்ர் ஆகும். அதன் முன்னேற்றங்களின் தரம் அதன் லைலதுல் கத்ர் ஆகும். எனவே தான் ஒரு மனிதர் எவ்வளவு இறைவனின் நேசத்திற்குரியவராக இருக்கின்றாரோ அவருக்கு அதே அளவு சோதனைகளும் வருகின்றன என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே நாமும் சில இடங்களில் சோதனையை கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். இது லைலதுல் கத்ர் ஆகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த சோதனையின் காரணமாக உண்மையான லைலதுல் கத்ர் ஐ தேடுதலும் இதே உத்வேகத்துடன் இருக்கின்றது. துஆக்களின் பக்கம் கவனமும் மனிதன் அல்லாஹ்வின் பக்கம் குனியும் போது தான் ஏற்படுகின்றது. இவ்வாறு தர்பிய்யத் மற்றும் குழந்தையின் வளர்ப்பின் காலகட்டத்தை வெற்றிகரமாக கடந்து செல்கின்றது. ஆனால் நாம் இதில் நம்முடைய ஒற்றுமையின் தரத்தை வீணாக்கிக் கொண்டே சென்றால் லைலதுல் கத்ரிலிருந்து சரியான பயனை அடைய முடியாது. நாம் நம்முடைய தியாகங்களை அல்லாஹ்வின் விருப்பம் என்று எண்ணியவாறு செய்து கொண்டே செல்வோமென்றால் நாம் வெற்றி அடைந்து கொண்டே செல்வோம். வெற்றிகளை கடந்து ஒரு புதிய வாழ்க்கையை அடையக்கூடியவர்களாக விளங்குவோம். ஒரு புதிய தோற்றத்தில் வெளிவருவோம். ஒற்றுமையையும் நல்லிணத்தையும் இறை விருப்பத்திற்காக நிலைநாட்டுவோமென்றால் இன்ஷா அல்லாஹ் புதிய புதிய படித்தரங்களை பார்க்கக்கூடியவர்களாக விளங்குவோம்.

இதுவும் ஒரு முக்கியமான விஷயமாகும். அதாவது எப்போது நாம் இந்த லைலதுல் கத்ர் ஐ வெற்றிகரமாக கடந்து செல்வோம் என்றால் முன்னேற்றம் மற்றும் இதில் முன்னேறிச் செல்லக்கூடிய முடிவுகளும் எண்ணற்றதாக இருக்கும் என்பதை நாம் நம்முன்னால் வைக்க வேண்டும். எப்போது இந்த லைலதுல் கத்ர் ஐ வெற்றிகரமாக கடந்து செல்வோமோ அப்போது முன்னேற்றத்திற்கான மற்றும் அதிகரித்துக் கொண்டே செல்வதற்கான தீர்ப்புகளும் அசாதாரணமாக இருக்கும் என்ற முக்கியமான கருத்தை நம்மில் ஒவ்வொருவரும் நம்முன் வைக்க வேண்டும். முடிவுகளை அல்லாஹ்வே எடுக்க வேண்டும். துஆக்களை அவனே கேட்க வேண்டும். லைலதுல் கத்ர் ஐ அவனே காட்ட வேண்டும். லைலதுல் கத்ர் ஐ பெறுவதற்கு காரணமானவற்றை பேணுவதும் முக்கயிமானதாகும். பிறகு காலை விடிவதும் அசாதாரணமாக இருக்கும். பிறகு விடியும் காலை அசாதாரணமாக தென்படும். எனவே லைலதுல் கத்ரிலிருந்து பயன் பெறுவதற்கு எப்போதும் இந்த விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். இறைவனின் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தியாயத்தின் நேரமே லைலதுல் கத்ர் ஆகும். இதைவிட சிறந்த லாபமான வியாபாரம் வேறொன்றுமில்லை. எனவே ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தியாகங்களுக்கு முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாமிய போர்களில் உதாரணமாக நிராகரிப்பவர்களும் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். ஆனால் நிராகரிப்பவர்கள் கொல்லப்பட்டது லைலதுல் கத்ர் ஆக இருக்கவில்லை. அவர்களின் தியாகங்கள் லைலதுல் கத்ர் இல்லை. ஆனால் முஸ்லிம் ஷஹீதானது லைலதுல் கத்ராக இருந்தது. ஏனென்றால் இறைவன் அந்த தியாகங்களை ஏற்றுக் கொண்டதாக ஆக்கி விட்டான். இந்த தத்துவத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது எந்த கஷ்டத்திற்கு இறைவன் விலையை நியமிப்பதில்லையோ அது லைலதுல் கத்ர் அல்ல.

அது தண்டனையாகும். ஆக்கினை ஆகும். ஆனால் எந்த கஷ்டத்திற்கு இறைவன் விலையை நியமித்துள்ளானோ அது லைலதுல் கத்ர் ஆகும். அதவாது எந்த இருள் மற்றும் துக்கத்திற்கு இறைவன் கூலியை

வழங்க முடிவெடுத்துள்ளானோ அது லைலதுல் கத்ர் ஆகும். இறைவன் மனிதர்களுக்காக எப்படிப்பட்ட நேரத்தை நியமித்துள்ளான் என்றால் அதில் செய்யப்படுகின்ற தியாகங்கள் அல்லாஹ்வின் பார்வையில் எப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகி விடுகின்றது.

நிச்சயமாக அஹ்மதிய்யா ஜமாஅத் இதன் தோற்றத்தை பார்க்கின்றது. மேலும் பார்த்துக் கொண்டிருக்கின்றது. சில நாடுகளில் அஹ்மதிகளுக்கெதிராக கடுமையான நிலைமைகள் இருக்கின்றது. எங்கு அவர்களுக்காக கடுமையான நிலைமைகள் இருக்கின்றதோ அங்கு ஃபஜர் உதயமாவதற்கான நற்செய்தியையும் வழங்குகின்றது. அங்கு இந்த லைலதுல் கத்ரின் விளைவாக உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிய்யத்தின் குழந்தைகள் பிறந்து கொண்டே இருக்கின்றன. மேலும் புதிய புதி ய ஜமாஅத்துகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இதிலிருந்து அதிகமாக அருள் பெறுவதற்கும், லைலதுல் கத்ரின் அருள்களை அள்ளுவதற்கும் நம்மில் ஒவ்வொருவரும் இனிமேல் எங்களுக்குள் உள்ள ஒற்றுமையையும், நல்லிணக்கமும் இதை விட அதிகமாக இருக்கும். மேலும் இதில் ஏதேனும் தடைகள் இருந்தாலும் பிளவுகள் ஏற்பட்டாலும் அதை உடனடியாக நாங்கள் நிரப்பி விடுவோம் என்ற உறுதிமொழி எடுக்க வேண்டும். ருஹமாவு பய்னஹும் – ன் முன் உதாரணமாகி உண்மையான அருளைப் பெறுவோம் என உறுதிமொழி எடுக்க வேண்டும். எனவே ரமலானில் நமக்குள் இருக்கக்கூடிய தனிப்பட்ட மனசுதாபங்களை அகற்ற வேண்டும். அதன் மூலமாக தனிப்பட்ட முறையில் லைலதுல் கத்ரிலிருந்து அருள் பெற வேண்டும். மேலும் லைலதுல் கத்ர் – ன் என்னென்ன பழங்கள், வெற்றிகள், முன்னேற்றங்கள், அருள்கள் ஜமாஅத் அளவில் இறைவன் நியமித்துள்ளானோ அதிலிருந்தும் பயன் பெறுபவர்களாக வேண்டும். எவ்வாறு அல்லாஹ்வின் அருளின் மழை பொழிந்து கொண்டிருக்கின்றதோ அதே வேகத்தில் எதிரிகளும் நமக்கு தடைகளையும், கஷ்டங்களையும் ஏற்படுத்துவான். ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றான். சோதனைக்குள்ளாக்க முயற்சி செய்கின்றான். மேலும் ஒரு சில நாடுகளுக்கு மட்டும் உட்பட்டதாகும் என்று நினைத்து விட வேண்டாம். பொறாமையின் நெருப்பு முன்னேற்றத்தை தடுப்பதற்கு முழு முயற்சி செய்கிறது. மேலும் எல்லா இடங்களிலும் முயற்சி செய்யும். ஆனால் லைலதுல் கத்ர் –ன் வருகைக்கான நற்செய்தி நமக்கு அந்த தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கான மற்றும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக செய்யப்பட்ட துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான செய்தியையும் தருகின்றன.

ஆக எதுவரை நாம் நம்முடைய நிலைகளை அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப அமைப்பதற்கு முயற்சி செய்வோமோ அதுவரை லைலதுல் கத்ரிலிருந்தும் அருள் பெற்றும் கொண்டே இருப்போம். நம்பிக்கையாளர்களின் நோக்கமும், முயற்சியும், ஆசையும் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை அல்லாஹ் வழங்கிய வாக்குறுதிக்கேற்ப உயர்வான மிஃராஜில் காண வேண்டும் என்பதாகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சேர்ந்து நாம் அன்னார் கூறிய வழிகளின் மூலம் முன்னேற்றங்களில் பங்காவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அன்னார் தனது வருகையின் நோக்கமாக கூறிய மேலும் அந்த வழி இந்த இரு விஷயங்களில் அடங்கியிருக்கிறது. அதாவது அடியானை இறைவனோடு சேர்ப்பது, இரண்டாவது ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவதாகும். இந்த இரு பணிகளும் நம்முடைய பொறுப்பாகும். அதாவது நம்முடைய இறை வணக்கத்தின் தரத்தையும் உயர்த்த வேண்டும். மேலும் நம்மிடையே இருக்கக்கூடிய கருத்து வேறுபாடுகளையும், சண்டைகளையும் அழித்து விட்டு ஒருவர் மற்றவருடைய உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உரிமைகளும் நிறைவேற்றப்பட்டு கொண்டிருக்கின்றன. பிறகு மனஸ்தாபங்களும், கருத்து வேறுபாடுகளும் இருக்கின்றன இது சாத்தியமில்லை. எனவே இந்த வழிமுறைகளின் படி நடந்தால் லைலதுல் கத்ரின் உண்மைத்துவத்தை விளங்கக்கூடியவர்களாகவும், அடையக்கூடியவர்களாகவும் விளங்குவோம். லைலதுல் கத்ர் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் விளக்கமளித்துள்ளார்கள். கூறுனார்கள். லைலத்துல் கத்ர் மனிதனுக்கு அவன் தூய்மையாகக்கூடிய நேரமாகும். எனவே நமது வாழ்க்கையை தூய்மையாக்குவதற்கு இப்படிப்பட்ட லைலதுல் கத்ர் ஐ தேட வேண்டும். மேலும் நாம் நமது வாழ்க்கையை தூய்மையாக்குபவராக ஆகும் போது தான் அது லைலதுல் கத்ர் ஆகும்.

இரண்டவாது விஷயம் ஜுமுஅதுல் விதாவாகும். இது பற்றியும் வியக்கத்தக்க விஷயங்கள் கூறப்படுகின்றன. இந்த காலத்தில் அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்ளச் செய்திருப்பதும் அல்லாஹ் நம்மீது செய்துள்ள அருளும் கருணையுமாகும். மேலும் நம்மை தவறான எண்ணங்களிலிருந்து தூய்மையாக்கியுள்ளான். மேலும் இத்தகு எண்ணங்களிலிருந்து ஓர் அஹ்மதிக்கு தூய்மையாக வேண்டும். இல்லையென்றால் அஹ்மதி ஆனதற்கு எவ்வித பயனுமில்லை. நமக்கு வாழ்வை வழங்கக்கூடியவனும், இந்த உலகத்திற்கு நம்மை அனுப்பிய ஓர் இறைவன் இருக்கின்றான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் எந்த இறைவன் நம்மை இவ்வுலகிற்கு அனுப்பினானோ அவன் நம்முடைய வாழ்க்கைக்காக ஒரு நோக்கத்தையும் வைத்துள்ளான். மேலும் அவன் கூறினான். வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன். அதாவது நாம் மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என்று கூறுகிறான். ஆக படைப்பின் நோக்கமே வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன் என்றிருக்கும் போது குறிப்பிட்ட நாளுக்கோ அல்லது குறிப்பிட்ட ஜுமுஆ வோடு மட்டும் இது தொடர்புடையதல்ல. மாறாக, ஒவ்வொரு தொழுகையும் ஒவ்வொரு ஜுமுஆவும் கடமையாகும். அதுமட்டுமல்லாமல் மனிதனுடைய சக்தி மற்றும் நிலைமைகளுக்கேற்ப இறைநெருக்கத்தை பெறுவதற்காக அவன் நஃபிலும் தொழுகின்றான். ஒரு உண்மையான அடியானுடைய வேலை என்னவென்றால், அவன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு தனது முழு ஆற்றலோடு நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதிலும் குறிப்பாக இறைவணக்கம் மனித படைப்பின் நோக்கமாக இருப்பதனால் இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இறை வணக்கம் பயனற்றது என்பல்ல. இறை வணக்கத்தின் பலன் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையும் ஒரு அருட்கொடையை கொண்டு வருகின்றது. மேலும் எண்ணற்ற அருட்களை விட்டுச் செல்கின்றது. தொழுகையின் நேரம் இதனால் வருவதில்லை. அதாவது அந்த சுமையிலிருந்து விரைவாக விடுபட்டுவிட வேண்டும். அதிலிருந்து விடுபட வேண்டும். மேலும் வீட்டிலிருந்து அதை வெளியேற்றி விட வேண்டும் என்ற காரணத்திற்காக அது வருவதில்லை. அதே போன்று ரமலானும் நாம் அதை வெறுமனவே நிறைவேற்றி விட வேண்டும் என்பதற்காக வருவதில்லை. நோன்பு கடமையாகும். உலகமும் நோன்பு வைக்கின்றது. எனவே நானும் நோன்பு வைக்கின்றேன் என்பதற்காக நோன்பு வருவதில்லை. அதே போன்று இதர வணக்கங்களும். இதுவும் நம்முடைய சுற்றுச் சூழல் நமக்கு இதை செய்யும் படி கூறுகிறது. அதனால் செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, நம்பிக்கையாளர் எப்பொழுதும் இதை தன்னிடத்தில் வைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றார். ஒரு மூமின் ஒரு முறையாவது உளப்பூர்வான முறையில் ஒரு முறையாவது தொழுகையை நிறைவேற்றினால் பிறகு அவருடைய உள்ளத்திலிருந்து தொழுகை வெளியேராது. தொழுகையில் ஒரு விதமான ரசனை இருக்கின்றது. அந்த ரசனை அவனை தொழுகையின் பக்கம் கவனம் செலுத்த வைக்கின்றது. தொழுகையை முடித்தவாறு சலாம் கூறுவது நாம் செல்கின்றோம். இனிமேல் விடுமுறை தான் என்பதற்காக அல்ல. மாறாக இறைவனுடைய கட்டளையை புரிந்தவாறு அவர் சலாம் கூறுகின்றார். ஆக, நம்பிக்கையாளரிடமிருந்து ரமலானும் செல்ல இயலாது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். நம்முடைய நாட்டில் ஒரு முஹாவிரா இருக்கின்றது. நோன்பு வைத்தார். மிகவும் சிறந்த ஒரு முஹாவிராவாக இருக்கின்றது. ஏனென்றால் எந்த நோன்பு கடந்து சென்று விட்டதோ அதையும் அவர் வழியனுப்புவதில்லை. மாறாக, அவர் அதை தன்னிடத்திலேயே வைத்துக் கொள்கின்றார். மேலும் அது அவருக்கு எப்போதும் அல்லாஹ்வின் அருளை பெறுவதற்கு காரணமாகின்றது. ஹதீஸில் வருகின்றது. ஒரு நம்பிக்கையாளரிடமிருந்து ஒரு தவறு நிகழ்ந்து விட்டால் அவனுடைய நற்செயல்கள் அவருக்கு கேடயமாக மாறி அவரை அழிவிலிருந்து காப்பாற்றுகின்றது. ஆக, எந்த நன்மைகளும் அது சென்று விட்டது என்று கருதாமல் அது நிலைத்துள்ளது என்று கருத வேண்டும். ஏனென்றால் எஞ்சியிருக்கக்கூடிய மற்றும் உள்ளத்தில் நிலைத்திருக்கக்கூடிய ஒன்றிலிருந்து தான் பயனடைய இயலும். திருக்குர்ஆனிலும் வல் பாக்கியாதுஸ் ஸாலிஹாத் என்று கூறி நன்மையான காரியங்கள் எஞ்சியிருக்கக் கூடியவையே ஆகும் என்று கூறுகிறான்.

நான் முதல் குத்பாவில் நோன்பு பற்றி கூறினேன். ஷஹ்ரு ரமலானல்லதி உன்ஸில ஃபீஹில் குர்ஆன் அதாவது அந்த அருளுக்குரிய நான் எந்நாளில் திருக்குர்ஆன் அருளப்பட்டதோ அது ரமலான் என்று அழைக்கப்படுகின்றது. மேலும் எப்போது குர்ஆன் இறங்குவது நின்றுவிடுமோ அந்நாள் அருளுக்குரிய நாளாக இருப்பதில்லை. ஆக, நம்பிக்கையாளரின் கடமை என்னவென்றால், இந்த நாட்களில் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கமும் அதை கற்றுக் கொள்வதன் பக்கமும் இருந்த கவனத்தை தனது வாழ்நாள் முழுவதும் தன்னுடைய வாழ்க்கையின் அங்கமாக்க வேண்டும். முழு வருடமும் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். முழு வருடமும் அதனை அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆன் படி நம்முடைய வாழ்க்கையை நாம் ஆக்கிக் கொண்டால் தான் நாம் திருக்குர்ஆன் இறங்கியதற்கான உரிமையை செலுத்துபவர்களாக விளங்க இயலும். மேலும் நமக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு சமயத்திலும் அதிலிருந்து நாம் பயன் பெற வேண்டுமென்றால் திருக்குர்ஆனை நம்முடைய உள்ளத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அல்லாஹ் நான் கூறிய இரு விஷயங்களின் பக்கமும் எப்போதும் கவனம் செலுத்தக்கூயடிவர்களாக ஆக்குவானாக. அதன் உண்மைத்துவத்தை அறியக்கூயடிவர்களாக விளங்குவோமாக. நம்முடைய லைலதுல் கத்ர் நம்மை வெற்றியின் பக்கம் கொண்டு செல்லட்டுமாக. இந்த ஜுமுஅதுல் விதாவை ஜுமுஅதுல் விதா என்று கூறுகின்றார்கள். நோன்பின் கடைசி ஜுமுஆவை ஜுமுஅதுல் விதா என்று கூறக் கூடாது. ரமலான் மாதத்தின் இறுதி ஜுமுஆ வாகும். இது நம்மை ரமலான் மாதத்தின் அருளை நம்மை விட்டு எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கக் கூடாது. மாறாக, இதன் அருள் நம்முடைய வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஆகிவிட வேண்டும். மேலும் திருக்குர்ஆன் இறங்கியதன் நோக்கத்தை நாம் எப்போதும் நிறைவேற்றக் கூடியவர்களாக விளங்குவோமாக. நான் ஆரம்பத்திலும் பாலஸ்தீனிய முஸ்லிம்களின் நிலை பற்றி கூறினேன். துஆக்களில் குறிப்பாக அவர்களையும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிதை ஏற்படுத்துவானாக. அவர்களை இந்த கஷ்டங்களிலிருந்து வெளியே கொண்டு வருவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். கர்கிஸ்தானைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நயீமுல்லாஹ் கான் சாஹிப் அவர்களுடையதாகும். 21ஜுலை 2014 அன்று ஹார்ட் அடாக்கின் காரணமாக தமது 61 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் கர்கிஸ்தானில் ஜமாஅத் நிறுவப்படுவதற்கு எண்ணற்ற தொண்டுகளை செய்துள்ளார்கள். மேலும் நாயிப் சதர் நேஷனலாக கர்கிஸ்தானில் தொண்டு செய்யக்கூடிய நற்பாக்கியத்தையும் பெற்றுள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அங்கு செல்வதற்காக மக்களிடம் கூறிய போது இவர்கள் அங்கு சென்றார்கள். வியாபார நோக்கமாக சென்றிருந்தாலும் மார்க்க வேலைகளையும் அவர்கள் செய்தார்கள். ஜமாஅத் பணிகளில் எப்பொழுதும் ஆர்வமுடையவர்களாக விளங்கினார்கள். தன்னுடைய வேலையை காட்டிலும் ஜமாஅத் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். அங்கு நிலைமைகள் சரியில்லாத போதிலும் இறுதி நேரம் வரை உளப்பூர்வமாக தொண்டு செய்து வந்தார்கள். தொழுகையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்களாகவும், அதிகமாக துஆ செய்யக் கூடியவர்களாகவும், அதிகமாக சதகா கொடுக்கக் கூடியவர்களாகவும், கட்டாயச் சந்தா மட்டுமின்றி இதர பொருள் தியாகத்திலும் தன்னை அர்ப்பணிப்பவர்களாக விளங்கினார்கள். பரிசுத்த மனிதராக விளங்கினார்கள். கிலாஃபத்துடன் அன்பின் தொடர்பு இருந்தது. முபல்லிக்கள் அங்கு சென்ற போது அவர்களுக்கு சில கஷ்டங்கள் இருந்தது. அவர்களுக்காகவும் அவர்கள் அதிகமாக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். மேலும் மேலிடத்திலிருந்து வரக்கூடிய விருந்தினர்களுக்கும் அதிகமாக கவனம் செலுத்தியுள்ளார்கள்.

அல்லாஹ் இவர்களுக்கு கருணை, மன்னிப்பை வழங்குவானாக. அவர்களுடைய மனைவி மற்றும் குழந்தைகளுக்கு உதவியாளனாக விளங்குவானாக. மேலும் கிலாஃபத்துடன் எப்போதும் பற்றுள்ளவர்களாக விளங்கச் செய்வானாக. அவர்கள் செய்த நன்மையான காரியங்களை தொடரச் செய்யக் கூடிய நற்பாக்கியத்தை இவர்களுக்கும் வழங்குவானாக.

Nazarath Nashr-o-Isha'ath, Qadian Translated By Moulavi. M.B. Tahir Ahmad